Registered as a Newspaper in Ceylon விலை 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (27-3-66) இதழ் 48

விசுவாவசு பங்குனி 14 துல்ஹஜ் பிறை 4 ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

## புறாணியில் தமிழ்

புறாணி, மார்ச் 26

புறாணியில் தமிழர்களின் பிள்ளைகள் தமிழ்மொழியில் படித்து பரீட்சை எழுத வழங்கப்பட்டுள்ள சலுகையைத் தொடர்ந்து, அங்கு விஞ்ஞானப் பேராசிரியராகக் கடமையாற்றிவரும் முன்னைநாள் யாழ்ப்பாண மாநகர சபை அங்கத்தவரான திரு. சோமசுந்தரத்தின் புதல்வி செல்வி சௌந்திரி தமது கேம்பிரிஜ் சிரேஷ்ட வகுப்புப் பரீட்சைக்கு தமிழ் மொழியை ஒரு பாடமாக எடுத்துள்ளார்.

# வட பகுதிக்கு புளி, சர்க்கரை அதிகரிப்பு

## புதுவருடத்தைமுன்னிட்டுஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

**தமிழ் - சிங்கள புதுவருடத்தினத்தை முன்னிட்டு அடுத்த மாதம் 4-ம் திகதியிலிருந்து ஒரு வாரம்வரை ஒரு கூப்பனுக்கு கால் ருத்தல் சர்க்கரையும் 2 அவுன்ஸ் புளியும் வடபகுதியில் விநியோகம் செய்யப்படவிருக்கிறது.**

ஒரு கூப்பனுக்கு ஒரு முறையே இவ்விதம் சர்க்கரையும், புளியும் பெற்றுக் கொள்ளலாமெனவும் இவ்விதம் கிடைக்காதவர்கள் யாழ்ப்பாணம் உணவுக்கட்டுப்பாட்டு உதவி அதிகாரிக்குத் தெரியப்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் தெரியப்படுத்தினல் திடீர்ப்பரிசோதனைக் குழுவை அனுப்பி சம்பந்தப்பட்ட கூப்பன் கடைகளைப் பரிசோதனை செய்து நடவடிக்கை எடுக்கப்படுமென உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி அறிவித்தல்செய்துள்ளார்.

(ந. நி.)

## உரக் கூட்டுத்தாபனம் பற்றிய மசோதா

### பிரதிநிதிகள்சபையில் நிறைவேறியது

கொழும்பு, சனி

வெளிநாட்டு செலாவணியில் 4 கோடியே 30 லட்சம் ரூபாய் மிச்சம் பிடிப்பதற்கு உதவக்கூடியதான அரசாங்க உரக்கூட்டுத்தாபனம் பற்றிய மசோதாவை இன்று மக்கள் பிரதிநிதிகள் சபை அங்கீகரித்தது. கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின்கீழ் இந்த மசோதா கொண்டுவரப்பட்டது.

உரஉற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் வெளிநாட்டு செலாவணியில் 4 கோடியே 30 லட்சம் ரூபாய் மிச்சம்பிடிக்க இந்த மசோதா வகைசெய்வதாக சபையில் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்குத் தேவையான சுமார் 19 கோடி ரூபாய் மூலதனத்தை உலக வங்கியிலிருந்து அல்லது வேறு சிறந்த வழியில் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளும் என்று கைத்தொழில் பதில் அமைச்சர் தெரிவித்தார்.

உரக் கூட்டுத்தாபனத்துக்கான மசோதா நிறைவேறிய பின் சபை ஏப்ரல் மாதம் 14-ந் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

## நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்க உதவுக

### தொழில் அதிபர்களுக்கு சம்மேளனத் தலைவர் வேண்டுகோள்

கொழும்பு, சனி

''தேசிய அரசாங்கம் ஒரு வருடகாலம் பதவியிலிருந்துவிட்டது நாட்டின் அபிவிருத்தித்திட்டங்கள்பற்றி ஆராய்வதிலும், பொருளாதாரத் திட்டங்கள் பற்றி ஆராய்வதிலும், பொருளாதாரத் திட்டங்களை எடைபோட்டு பார்ப்பதிலுமே இந்த ஒருவருடகாலமும் கழிந்துவிட்டது. முன்வரும் காலத்தில் அபிவிருத்தித் திட்டங்களைத் திறமுடன் மேலான முன்னேற்றத்துக்கு வழிவகுக்க அரசாங்கம் தன்னை தயார் செய்துகொள்ள வேண்டிய கட்டம் இப்போது உருவாகியுள்ளது'' என்று இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் திரு. கே. சோமசுந்தரம் மேற்படி சம்மேளத்தின் 5-வது வருடாந்த விழாவில் உரை நிகழ்த்துகையில் கூறினர்.

அரசாங்கம் கலனியப் பாரம்பரியத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது. அதுபோலவே அது நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்வதிலும் நாட்டம்கொண்டுள்ளது. எனவே

தனியார்துறையிலிருக்கும் கைத்தொழில் அதிபர்கள் அனைவரும் அரசாங்கத்தின் முன்னேற்றத் திட்டங்களுக்குப் பூரண ஆதரவுகொடுக்கவேண்டியது அவசியம்

(6-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு நீந்தும் இந்திய நீச்சல் வீரர்

### மன்னர் அல்லது காங்கேசன்துறைக்கு வர முயற்சி

சென்னை, மார்ச் 27

**1960-ம் ஆண்டு ஆங்கிலக் கால்வாயை வெற்றிகரமாக நீந்திக்கடந்த பிரபல இந்தியநீச்சல் வீரர் மிகிர்சென் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நீந்திக் கடக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்.**

அடுத்த வார முதற் பகுதியில் அவர். இராமேஸ்வரத்திற்கருகிலுள்ள மண்டபத்துக்கு வந்து சேருவார். அங்குள்ள நிலைமையை நன்கு ஆராய்ந்தபின் தான் நீந்தவிருக்கும் பகுதி பற்றி அவர் இறுதி முடிவு செய்வார். தனுஷ்கோடிக்கும் தலைமன்னருக்குமிடையேயான கடல் 20 மைல் தூரம் இருக்கிறது.

திரு சென் இன்று கெரவல் விமானம் மூலம் சென்னை வந்து சேருகிறார். அவர் சில தினங்கள் சென்னையில் தங்குவார். திங்கட்கிழமை அவர் மண்டபம் சேர்வார்.

இந்தியாவிலுள்ள கோடிக்கரைக்கும் இலங்கையில் உள்ள காங்கேசன்துறைக்கும் இடையேயான பாக் ஜல சந்தியை நீந்திக் கடப்பது அவரது மற்றோர் ஏற்பாடு. இராமேஸ்வரத்துக்கு வடக்கே இந்த இடம் ஆரம்பிக்கிறது. எந்த வழியாக நீந்துவது என்பதுகுறித்தும், இதற்கான வசதிகள் குறித்தும் திரு. சென் தமது நீச்சலுக்கு முன் ஆராயவிருக்கிறார்.

இலங்கை வீரர் நவரத்தினசாமி முன்பு யாழ்ப்பாண வட கடலிலிருந்து கோடிக்கரைக்கு நீந்திச் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பி. டி. ஐ

## தமிழ்மொழி சட்ட அமுலுக்கு தனிப் பகுதி

### ஆணையாளரை நியமிக்க நீதிமந்திரி சம்மதம்

கொழும்பு, சனி

தமிழ்மொழிச் சட்ட (விசேஷ, விதிகளை அமுல் நடத்துவதற்கான அலுவல்களைக் கவனிப்பதற்கு உத்தியோக மொழி இலாகாவில் தனியான தமிழ்ப் பிரிவு ஒன்றை ஆரம்பிப்பதற்கும் பொறுப்பாக ஓர் ஆணையாளரை நியமிப்பதற்கும் நீதிமந்திரி சம்மதம் தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழிச்சட்ட விதிகளை அமுல் நடத்துவதில் ஏற்படக்கூடிய பிரச்னைகளை ஆராய்ந்து அவற்றை நீக்குவதற்கு ஆலோசனைகள் கூறுவதற்கென ஓர் ஆலோசனைச் சபையை நியமிப்பதற்கும் மந்திரி சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், பண்டிதர் கா, பொ. இரத்தினம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோர் நீதிமந்திரியை இன்று சந்தித்து தமிழ் மொழிச்சட்ட விதிகள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்திய பொழுதே மந்திரி மேற்கண்ட வாக்குறுதியை அளித்தார்.

இதுசம்பந்தமாக திறைசேரி விரைவில் சுற்றுநிருபம் ஒன்று அனுப்புமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கோப்பாயில்மின்சாரவிநியோகம்

### மந்திரி திருச்செல்வம் ஆரம்பித்துவைத்நார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'கிராமங்களெல்லாம் மின்சார வசதிபெற வழிசெய்வதுவே அரசாங்கத்தின் நோக்கம். தண்ணீர் வீணாகாதவாறு கிராமத்து மக்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். தோட்டங்களுக்கு இறைக்கும்போது சிக்கனமாக இருந்துகொள்ளவேண்டும். இதனல் தண்ணீர் வற்றிப்போவதை ஒருவாறு தடுக்கலாம்'.

இவ்வாறு கோப்பாயில் மின்சார விநியோகத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைந்துப்பேசிய ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் கூறினர்.

திரு. திருச்செல்வம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இப்பகுதிக்கு மின்சாரவிநியோகம் கிடைத்துள்ளது இங்குள்ளமக்களுக்குமிகவும் உதவுவதாக இருக்குமென நம்புகிறேன். இப்பகுதியில் கைத்தொழில் வளர்சிக்கும் இதுபெரிதும் உதவியளிக்கும். இதைத் தக்க முறையில் பயன்படுத்துவது இங்குள்ள மக்களின் பொறுப்பு.

கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் இவ்வைபவத்துக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் கூறியதாவது:

'கோப்பாயிலுள்ள ஒழுங்கைகளுக்கும் சில வீதிகளுக்கும் மின்சார விநியோகம் மேலும் விஸ்தரிப்புச்செய்வதற்கு இன்னமும் நிதி தேவைப்படுகிறது இதனைப் பெற்றுத்தருமாறு நாம்

(6-ம் பக்கம் பார்க்க)

## காணவில்லை

பருத்தித்துறைபுலோலி தெற்கைச் சேர்ந்த மனோகரன், ஸ்ரீஸ்கந்தகுமார், சிவகுமார் ஆகியமூவரும்கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வீட்டிலிருந்து காணமற் போய்விட்டனர். இவர்களைக் காணது பெற்றோர் மிகவும் கவலைகொண்டிருப்பதால் மூவரையும் வீடுவந்து சேருமாறு பெற்றோர் அன்புடன் அழைக்கின்றனர்.

Advt.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கடவுள் என்னைக் கைவிட்டதே இல்லை. சோதனைமிக்க சமயங்களிலும், சிறைகளில் பல சங்கடங்கள் ஏற்பட்டபோதும், கடவுள் எனக்கு மிக சமீபத்திலிருந்து கைகொடுத்துள்ளார். பிரார்த்தனைக்குப் பலனில்லாமற்போவது கிடையாது.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELANADU: National Tamil Daily Post Box ... JAFFNA
Telegrams: EELA NADU ...
...ப்பாணம் விசுவாவசு ஆ... பங்குனி 14 உ (27-3-66)

# வடக்கை மறந்துவிட்டார்!

உல்லாச யாத்திரை மசோதாவைப்பற்றி பார்லிமெண்டிலே விவாதம் நடந்தபோது அமைச்சர் மீது நல்லூர்ப் பிரதிநிதி டாக்டர் நாகநாதன் ஒரு பாரதூரமான குற்றச் சாட்டைச் சுமத்தினார். வெளிஉலகத்திலிருந்து யாத்திரிகர்களை இலங்கைக்கு வசீகரிப்பதுபற்றி அமைச்சர் பேசுகையில், வடக்குப் பகுதியை மறந்துவிட்டாரென்றும் இது வருந்தத்தக்கதென்றும் சரியாக இடித்துச் சொன்னார். யாழ்ப்பாணம் ஒரு யாத்திரை ஸ்தலமாகப் பிரகடனப் படுத்தப்படாவிடினும் இங்கு வந்துள்ள சில யாத்திரிகர்களை இதன் அழகு பெரிதும் வசீகரித்துள்ளதாகவும் கூறினார்.

இந்நாட்டுக்கு வரும் பிரமுகர்களை வடக்குப் பக்கமாக இதுவரை தலை காட்டவும் அரசாங்கம் விட்டதில்லை கண்டி, அல்லது அனுராதபுரத்துடனே இலங்கை முடிந்துவிட்டதாக அவர்கள் கருத்தாக இருந்திருக்கின்றது. இப்பகுதியிலே பார்க்க வேண்டிய புராதன இடங்களோ, ஸ்தலங்களோ, இயற்கை அழகுகளோ இல்லை என்று அவர்கள் நினைத்திருக்க வேண்டும். அல்லாவிடில் தமிழர் வசிக்கும் பகுதியை வேண்டுமென்றே அலட்சியம் செய்து ஒதுக்கிவிட, அந்த இலாகாவிலிருந்த சில அதிகாரிகள் வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்த வேலையா? இது எப்படியாயினும், வடபகுதியை மட்டுமன்றி, கிழக்கையும் இனி எக்காரணம்பற்றியும் இப்படி ஒதுக்கமுடியாது.

வடக்கிலே சரித்திர முக்கியம் வாய்ந்ததும், இயற்கை அழகு மிளிர்வதுமான பல முக்கிய இடங்கள் உண்டு. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பிரபல ஹோட்டல்காரர் அதை விளக்கி, ஆங்கிலத்திலே வெளியிட்டுள்ள ஒரு துண்டுப் பிரசுரத்தைப் பார்த்தோம். இங்குள்ள பண்ணைப்பாலம் போலும், கடல் ஏரிகள் போலும் உலகிலே எங்கும் கிடையாதென்றும், சரித்திர, கலாசார முக்கியம் வாய்ந்த பல இடங்கள் இங்கு இருப்பதாயும் அந்தப் பிரசுரம் சரியாகச் சுட்டிக்காட்டியுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள இயற்கை அழகுகளைப் படப்பிடித்து, இங்கு உல்லாசப் பிரயாணிகளை அதிகமாக வசீகரிக்க விளக்கமான பிரசுரங்களை வர்ணப்படங்களுடன் வெளியிட வேண்டும்.

வடக்கு மாகாணத்தை உல்லாச யாத்திரைத்திட்டத்தில் சேர்க்க அரசாங்கம் தயாராக இருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது. இது உண்மையாயின் வரவேற்கத்தக்கதே. நீண்டகால தவக்கத்துக்குப் பின்னராவது, தேசிய அரசாங்கம் ஒரு பெருங்குறையை நீக்க முன்வருவது பாராட்டத்தக்கது. வெளி யாத்திரிகர்கள் இங்கு அதிகமாக வருவதாயின், இங்கு அவர்கள் வசதியாகத்தங்க ஹோட்டல் முதலிய வசதிகள் இருக்க வேண்டும். அரசாங்கம் ஒரு ஹோட்டல் கூட்டுத்தாபனத்தை அமைக்கவும்முன்வந்துள்ளது. இதனால் வடமாகாண ஹோட்டல் வசதிகள் எவ்வளவு தூரம் பெருகுமென்பது தெரியவில்லை. எப்படியும் இம்முக்கிய விஷயத்தில் தனிப்பட்டவர்களின் முயற்சிகளுக்குக் கூடிய ஆதரவும் உற்சாகமும் அளிக்க வேண்டியதவசியமாகும்.

தம்பதெனியா பிரதிநிதி கூறியதுபோல், அரசாங்க அதிகாரிகள் இப்பணியை வெற்றிகரமாகச் செய்வது துர்லபம். அனுபவமும், உற்சாகமும், கண்யமும் மிக்கவர்கள் ஹோட்டல் தொழிலில் ஈடுபட முன்வந்திருப்பது நல்லதோர் அறிகுறி. இதில் முதலீடு செய்பவர்கள் நாட்டுக்கு முக்கியமான ஒரு சேவை செய்வதால், இவர்களுக்கு வேண்டிய உதவியளித்து, தனியார் துறையையும் அதிகமாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். ஹோட்டல்களைக் கட்டுவது மட்டும் போதாது. அங்குருசியான உணவுகள் கிடைக்கும்படி செய்வது அவசியம். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அதிகமான யாத்திரிகர்கள் வர மிக ஆவலுடன் உள்ளனர். கதிர்காமம், திருக்கேதீச்சரம், திருகோணேச்சரம் முதலிய புண்ணிய ஸ்தலங்களை தரிசிப்பதுடன், இராமாயண கால இடங்களைப் பார்க்க வேண்டுமென்றும் அவர்களில் பலருக்கு அதிக ஆவலுண்டு. என்றாலும் அவர்கள் இங்கு வர இலங்கை அரசாங்கம் 'விசா' கொடுக்க மறுப்பதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையா? இந்தியாவிலுள்ளவர்களெல்லாரும் 'கள்ளத் தோணிகள்' ஏழைகள் என்று நினைப்பதாயின் அது பெருந்தவறு. யாத்திரை மூலம் இரு தேச நல்லுறவையும் பலப்படுத்தி, பல பிரச்னைகளையும் சுமுகமாகத் தீர்க்க மேலான சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் ஆகவே இந்திய யாத்திரிகர்களுக்கான முறையில் இங்கு ஹோட்டல் வசதிகளை அமைக்கவும், நல்ல சமையற்காரர்களைவரவழைக்கவும் அரசாங்கம் தாராள மனதுடன் அனுமதியளிக்க வேண்டும். சீதை சிறைப்பட்டிருந்ததும், ஸ்ரீ ராமரின் திருவடிகள் பட்டதுமான இப்புனித பூமிக்கு வந்து பார்க்க இந்தியாவில் லட்சக் கணக்கான யாத்திரிகர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். ... கத்தி யாத்திரிகர்களை ... டும் கருதாமல், இந்தியாவுள்ளிட்டு கிழக்கத்தி யாத்திரிகர்களையும் வசீகரிக்க புதிய சபையினர் ஆவன செய்தல் வேண்டும். இவ்விஷயத்தை தமிழ்ப் பிரதிநிதிகள் தக்கபடி எடுத்துச் சொன்னால், தக்க பயன் இருப்பதுடன் இலங்கைக்கும் அதனால் [illegible]

# பாரதி சாடிய பழமை

- கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை -

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தின் நாற்பதாண்டு பூர்த்தியை முன்னிட்டு இம்மாதம் 20-ம் திகதி முதல் ஒருவாரம் வரை கொண்டாடப்படும் கலை, இலக்கிய விழாவையொட்டி இக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

பாரதி தமிழருக்குப் புது வழி காட்டினார். புதுமையை உணர்த்தினார். தமிழர் தன் மானத்தோடு வாழ்ந்து சிறக்கவேண்டுமென்று விரும்பினார். தமிழரின் தன்மான உணர்ச்சியை வளர்ப்பதற்காகப் பழமையைப் பாடினார். பழமைச் சிறப்புப் பெற்ற தமிழர் புதுமைச் சிறப்பும் பெறவேண்டுமென்று விரும்பினார். பாரதியார் பழமைச் சிறப்பை எடுத்துப் பாடியஅளவுவேறு எந்தத் தமிழ்ப் புலவரும்; தமிழரின். இந்தியரின் பழமைச் சிறப்பை எடுத்துப் பாடவில்லை.

பாரதியார் பழமையைப் பாடினார் என்று கூறும்பொழுது, ஒன்று கவனத்தில் வைத்திருக்கவேண்டும். பழமையென்பது எந்த ஒரு தனிக்காலத்தையும் குறிப்பதாகாது, இந்தியாவும் தமிழகமும் தமது நீண்டகால வரலாற்றில் ஓங்கியிருந்த காலங்களும் உண்டு. பாரதியார் அவ்வக் காலச் சிறப்புக்களையேபாடுகிறார். அவர் தாம் வாழ்ந்த காலத் தமிழகத்தைச் சிறப்பித்துப்பாடவில்லை. காரணம்,

'நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த
நிலைகெட்ட மனிதரை
நினைந்துவிட்டால்' என்ற

அடிகளில் காணப்படுகிறது. பாரதி கவிதைகள் பலவற்றின் திறவுகோல் இந்த அடிகளே. தமிழ்மொழி, தமிழ் இனம், பாரதநாடு யாவற்றுக்கும் விடுதலை வேண்டியழைத்தார் பாரதியார் 'என்று தணியும் இந்தச்சுதந்திர தாகம்' என்ற ஏக்கம் பாரதி கவிதைகள் பலவற்றில் இழையோடுகிறது. விடுதலை அல்லது சுதந்திரம் என்பது பாரதியின் மூச்சு எனலாம்.

பாரத நாட்டுப் பழைய நாகரிகமும், ஐரோப்பியக் கண்டத்துப் புதிய நாகரிகமும் இந்தியாவில் கலந்து கொண்டிருந்த வேளையில் தோன்றிய பாரதியார். ஐரோப்பிய நாகரிகத்தில் காணப்பட்ட சில சிறப்புடைப் பண்புகளைத் தமிழ் மக்கள் ஏற்கவேண்டுமென்று விரும்பினார். சாதிப்பிரிவினை, பெண்ணடிமை முதலியவை சமூகத்திலிருந்து ஒழிய வேண்டுமென்றுபாரதிவிரும்பினார். இக்குறைபாடுகளில்லாத ஐரோப்பியர் சமூக வாழ்வு பலவகையிலும் சிறந்திருந்ததைப் பாரதி கண்டார்,

'மனிதரில் ஆயிரம் ஜாதி
என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை என்று பாரதி பாடினார். 'நந்தனைடபோலொரு பார்ப்பான் இந்த நாட்டினில் இல்லை' என்று அப்படிப் பாடியதற்குக்காரணமுங் கூறினார். மரபு வழியில் வந்த தமிழ்ப்பெண் சமூகத்தில் அடிமையாக வாழ்தலைக் கண்ட பாரதி, தன்னுடைய கவிதைகளில் புதுமைப் பெண்ணை வகுத்துக்கொண்டார். 'நாணும் அச்சமும்நாய்கட்கு வேணடுமாம்' என்று கூறுபவள் பாரதியின் புதுமைப்பெண். புதுமைப் பெண்ணுக்கு, 'நிமிர்ந்த நன்னடை. நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்தஞானச் செருக்குமிருப்பதால், செம்மை மாதர் திறம்புவதில்லை' என்று இலக்கணமும் கூறினார் பாரதி.

பாரதி சமூக சீர்திருத்தத்தில் முனைந்து நின்றபொழுது பார்தியை எதிர்த்து நின்றவர்கள் தாங்கள் சாத்திரங் கூறியபடி செய்வதாகவும் பழமைவழி நிற்பதாகவும் சமாதானம் கூறினர். சமூக முன்னேற்றத்துக்குத் தடையாகநிற்பவர்களும், புதுமை புகுவதை விரும்பாதவர்களும் இவ்வாறு கூறியதனால், பாரதி பழைய சாத்திரங்களைப் பல இடங்களிலும் கடிகிறார். சாத்திரங்கள் ஒன்றும் கல்லாத பாமரர் கூட, சாத்திரத்தின் வழியில் நிற்பதாகக் கூறுவது, பாரதிக்குக் கோபமூட்டுகிறது.

'சாத்திரங்கள் ஒன்றுங் காணார்—பொய்ச்
சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே'

என்கிறார். கண்ணன்—என் தந்தை என்ற பாடற்பகுதியில், 'உங்கள் சூனியப் பொய்ச் சாத்திரங்கள்கண்டு நகைப்பான்' என்கிறார்.

'மேலவர் கீழவரென்றே - வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெல்லாம் - இன்று
பொசுக்கி விட்டாலெவர்க்கும் நன்மையுண்டாம்'

பழம் சாத்திரங்களைத் தீயிலிடும்படி, தமிழ்க் கவிதையில், முதன்முதல் சொல்லியவர் பாரதி. பாஞ்சாலி சபதத்தில், பாஞ்சாலி மூலமாகவும் சாத்திரங்களைச் சாடுகிறார்.

'காலத்திற்கேற்ற
வகைகள் — அவ்வக்
காலத்திற்கேற்ற
ஒழுக்கமும் நூலும்
ஞாலமுழுமைக்கும்
ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும்
நூலொன்றுமில்லை'

என்ற பாரதியின் சிந்தனைக் கருவூலம் விலைமதிக்க முடியாத மாணிக்கம் போன்றது.

உயிர் பெற்ற தமிழர் பாட்டு என்ற பகுதியில், பாரதியின் புதுமைக் கருத்துக்கள் சில காணப்படுகின்றன. தமிழ்ச் சமுதாயம் புத்துயிர் பெற வேண்டுமென்பதுதான், பாரதியின் வாழ்க்கை இலட்சியமெனலாம். அந்த இலட்சியம் கைகூடும் பொழுது தமிழ்ச்சமுதாயத்தின் எத்தகைய கருத்துக்கள் நிலவும் என்று பாரதி கற்பனை செய்து பாடிய பகுதியே இது தெய்வம், வேதம், புராணம் என்பன பற்றிய அவர் கருத்துக்கள் புரட்சிகரமானவை.

'உண்மையின் பேர்
தெய்வமென்போர் —
அன்றி
ஓடிடும் தெய்வங்கள்
பொய்யெனக்
கண்டோம்
உண்மைகள் வேதங்கள்
என்போம் — பிறிது
உள்ள மறைகள்
கதையெனக் கண்டோம்'

பாரதி தான் வாழ்நாள் இறுதிப் பகுதியில்.

வேதாந்தியாக மாறிவிட்டார் என்று இராசகோபாலாசாரியார் ஒரு சமயம் குறிப்பிட்டார். பாரதி பல கடவுளரையும் பாடியிருக்கிறார் கண்ணன் பாட்டு

(5-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுகிறது

சென்னையிலே இம்முறை எங்கே தங்கியிருந்தேன் தெரியுமா? சுவாமி சுத்தானந்த பாரதியார் அடையாற்றிலே அமைத்துள்ள யோகசமாஜ ஆசிரமத்தில் தான்.

மிக அமைதியான சூழ்நிலை. ஸ்ரீராம்நகர் என்று சொல்லப்படும் அந்த இடத்திலே சுமார் இரண்டு ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் இந்த ஆசிரமம் அமைந்துள்ளது. சுவாமிக்கு அந்த இடம் கிடைத்ததே ஒரு ருசியான கதை. முன்னர் அவருக்கு மாறாக பிரிட்டிஷ் அரசாங்க சார்பில் உளவறிந்து வந்த ஓர் அன்பர், பின்னர் சுவாமியின் சீடராகி அவருக்கு இந்த இடத்தை இலவசமாகக் கொடுத்தாராம்!

வெறும் பொட்டல் காடாகக்கிடந்த இப்பகுதியில் இப்போது பெரிய பெரிய ஸ்தாபனங்கள் ஏற்பட்டுள்ளன. சில வருடங்களிலே இந்த இடம் மிக முன்னேறிவிடும். இவ்வித மதிப்பு வாய்ந்த இடம் தலைநகரில் கிடைக்க முடிந்ததே பெரிய காரியம். தென் வடலாக மத்தியிலே மச்சுக் கட்டடம் அமைந்துள்ளது. கீழே பெரிய மண்டபம். 500 பேருக்குமேல் உட்காரலாம். வடக்குப்பக்கம் அச்சுக்கூடம் இருக்கின்றது. சுவாமியின் நூல்கள் அங்கு அச்சடிக்கப்படுகின்றன. ஏற்கனவே ஒரு தினசரிப்பத்திரிகையின் (சுயராஜ்யா) ஆசிரியராக இருந்த சுவாமி அவர்கள், அங்கு நல்ல முறையிலே ஆத்மீகத்தை வளர்க்கும்படியான தினசரிப்பத்திரிகையை வெளியிட வேண்டுமென்றும் எண்ணம் கொண்டுள்ளார். அதற்கான வாய்ப்புகளும் அங்கு உள்ளன.

மச்சின்மேலே பெரிய கூரைக் கொட்டகை. முன்னர் சுவாமி அங்குதானிருந்தார்கள். மோட்டார் விபத்தொன்று ஏற்பட்ட பின் அவர் கீழேயே ஓர் அறையில் இருக்கின்றார். அவர் பிழைத்தது தெய்வாதீனம் இடதுகாலில் பெரிய கட்டு. இப்போது எவ்வளவோ தேவலாம். பிடித்துக் கொண்டு மெதுவாக நடக்கிறார். ஒரு ருசியான கதை சுவாமியைப் பார்க்க கி. வ. ஜகன்னாதனவர்கள் சில நண்பர்களுடன் வந்தார். சுவாமியைக் கண்டதும், "என்ன சுவாமி, கால்கட்டு எதுவும்வேண்டாமென்று துறவியான தங்களுக்கு இந்தக் கால்கட்டு எப்படி ஏற்பட்டது?" என்று சிலேடையாகக் கூறியதும், சுவாமி உள்ளிட்டு எல்லாரும் சிரித்துவிட்டனர்.

இரவிலும் அவர் தூங்குவதில்லை. டைப் மெஷினில் ஏதாவது கையச்சு அடித்துக் கொண்டே இருக்கிறார். அவர் எழுதி எழுதிக் குவிக்கும் இலக்கியங்களுக்குக் கணக்கில்லை. பல, நூல்களாக வெளியாகியுள்ளவ. அச்சாகாமல் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. எப்படித்தான் அவர் எழுதுகிறாரோ! உள்ளே ஒரு பெரிய சக்தியிருந்தே இவ்வளவு செய்ய வைக்கின்றதென்பதில் ஐயமில்லை. அவர் பாடியுள்ள பாடல்களை இந்தியா, இலங்கை, மலாயா வானொலிகள் அடிக்கடி இனிமையாக ஒலிபரப்புவதைக் கேட்கின்றோம்.

அவர் கால்முறிந்து ஆஸ்பத்திரியில் படுத்தும் பேனாவை அசைத்துப் புதுப் புது நூல்கள் எழுதிக் கொண்டே இருக்கிறார் சமுதாயத்திடம் பணமே

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஜெர்மனி வெளியிட்டுள்ள ஆயுதபரிகரணதிட்டம்

## அமைதியான முறையில் ஜெர்மனி இணையவேண்டும்

### கிழக்கு ஐரோப்பாவுடன் பலாத்கார நிறுத்த உடன்பாடு தேவை

பொன், மார்ச் 26

ஆயுதப்பரிகரணம், மத்திய ஐரோப்பாவில் சமாதானத்தைப் பாதுகாப்பது ஆகியவற்றுக்கான யோசனை ஒன்றை மேற்கு ஜெர்மன் பிரதமர் எர்ஹாட் வெளியிட்டிருக்கிறார். இந்த யோசனைகள் எல்லா உலக நாடுகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஐரோப்பாவில்பலாத்கார உபயோகத்தை நிறுத்திக் கொள்ளும் உடன்பாடு ஒன்றை மேற்கு நாடுகள் கிழக்கு நாடுகளுடன்செய்து கொள்ள வேண்டும் என ஜெர்மன் யோசனை கூறுகிறது. அணுஆயுதங்களை ஒரு நாடு மற்றோர் நாட்டுக்குக் கையளிக்கக் கூடாது என்றும், அணுஆயுதங்களை தற்போது உற்பத்தி செய்யாத நாடுகள் இனியும் அவைகளை உற்பத்தி நெய்யக் கூடாது என்றும் அது மேலும் கூறுகிறது.

மேற்கு ஜெர்மனிக்கு செக்கோஸ்லோவேகியாவுக்கு எதிராகப் பிரதேச ஆசை எதுவும் கிடையாது என அது கூறுகிறது.

இரு ஜெர்மனிகளையும் அமைதியான முறையில்ஒன்ருக இணைக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஜெர்மன் யோசனை ஆக்கபூர்வமானது என்றும் இது பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்க வெளிநாட்டுமந்திரி திரு. ரஸ்க் கூறினர். பிரிட்டன் இந்த யோசனைகளை வரவேற்றிருக்கிறது.

ஜெர்மன் ஐக்கியம் மீண்டும் ஒரு நிபந்தனையாக்கப் பட்டிருக்கிறது என ரஷ்ய டாஸ் ஸ்தாபனம் கூறியது.

# அதிபர் டிகால், பிரதமர் பொம்பிடோவுடன் பேச்சு

### பாரிசில் இந்திராகாந்தி

பாரிஸ், மார்ச் 26

பாரதத்துக்கும் பிரான்சுக்குமிடையே விஞ்ஞான-பொருளாதார ஒத்துழைப்பு பற்றி ஸ்ரீமதி இந்திரா காந்தியும் ஜனுதிபதி டிகாலும் பேச்சு நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

பிரதமர் பொம்பிடொ, டிகால் ஆகிய தலைவர்களுடன் ஸ்ரீமதி காந்தி 2 மணி நேரத்திற்குமேல் பேசினர்.

இவ்வாண்டு மத்தியில் இந்திய வெளிமந்திரி சர்தார் சுவர்ண்சிங் பாரிசுக்கு விஜயம் செய்து, இதுசம்பந்தமான பேச்சுகளை மேலும் தொடர்வார் என அறிவிக்கப்பட்டது. பிரதமர் இந்திராவும் அதிபர் டிகாலும் தென்கிழக்காசிய நிலைமை பற்றியும், ஜெனிவா ஒப்பந்த அடிப்படையில் வியட்னும் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்பதுபற்றியும் உடன்பாடு கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

டாஷ்கண்ட்ஒப்பந்தத்தை அதிபர் டிகால் பாராட்டிப் பேசினர்.

பிரான்ஸ்-இந்தியா உறவு இன்னும் நெருக்கமாக இருக்க முடியும் என்ற கருத்து பேச்சுகளின்போது உறுதிப்பட்டது எனக் கூறப்பட்டது.

சென்னைக்கருகே பிரெஞ்சு ஒத்துழைப்புடன் அமைக்கப்படும் அணுசக்தி நிலையம் இதற்குச் சான்று எனப் பிரதமர் பொம்பிடோ கூறினர்.

பிரான்சும் இந்தியாவும் விஞ்ஞான-கலாச்சார ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடும் என ஸ்ரீமதி இந்திரா கூறினர்.

ஸ்ரீமதி இந்திராவுக்கு அளிக்கப்பட்ட விருந்தில் ஜெனரல் டிகால் பேசியபோது, இரு நாடுகளுக்குமிடையே அரசியல் ஒத்துழைப்பு அதிகரித்திருப்பது பற்றிக் குறிப்பிட்டார். காந்தி, நேரு சித்தாந்தத்தின் வெற்றிபற்றிக் குறிப்பிட்ட டிகால் விடுதலைப் போராட்டத்தலைவர்களுக்கு புகழாஞ்சலி செலுத்தினர்.

ஸ்ரீமதி காந்தி பதிலளிக்கையில் ஐரோப்பாவில் பிரான்சைப்போல ஆசியாவில் இந்தியா செயல்புரிந்திருக்கிறது என்ருர். ஸ்ரீமதி காந்தி பிரெஞ்சு மொழியில் பேசினர்.

# தென்வியட்னமில் இவ்வாண்டு பொதுத் தேர்தல்!

### பிரதமர் கை நம்பிக்கை

சைகோன், மார்ச் 26

தென் வியட்னமில் ராணுவ ஆட்சிக்குப் பதில் அரசியலமைப்பின் கீழான ஆட்சி ஒன்றுக்கான திட்டத்தைப் பிரதமர் கை வெளியிட்டிருக்கிருர். அரசியலமைப்பு நகல் ஒன்று இரு மாதங்களில் தயாரிக்கப்பட்டு, மக்களிடையே அது வாக்கெடுப்புக்கு விடப்படும் எனப் பிரதமர் அறிவித்தார்.

இவ்வாண்டுக்குமுன்தென் வியட்னமில் பொதுத் தேர்தலை நடத்தப் பிரதமர் எதிர்பார்ப்பதாகக் கூறப்பட்டது.

நேற்றும் ராணுவ அரசாங்கத்தை எதிர்த்துவியட்னமில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

பாரிசில் சுமார் 1,00,00 ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்க தூதராலயத்தை நோக்கிச் சென்றனர். வியட்னமிலிருந்து அமெரிக்கா வெளியேற வேண்டும் எனக் கூறும் பல கோரிக்கைகளை அவர்கள் சமர்ப்பித்தனர்.

# மாஸே-துங் சுகவீனம்

லண்டன், மார்ச் 2

சீனத் தலைவர் மாஸே-துங் கடுமையான சுகவீனமுற்றிருப்பதாக லண்டனிலுள்ள ராஜதந்திர வட்டாரங்களுக்குக் கிடைத்துள்ள தகவல்கள் கூறுகின்றன.

## காமராஜ உலக சுற்றுப்பயணம்

புதுடில்லி, மார்ச் 26

பாரதத்திலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு ஜான் பிரீமன், காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜைச் சந்தித்து பிரிட்டனுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

அழைப்பை திரு. காமராஜ் ஏற்றுக்கொண்டார். தமது விஜயம்பற்றிய திகதியை பின்பு திட்டவட்டமாகத் தெரிவிப்பதாய் அவர் கூறினர்.

திரு. காமராஜ் வருகிற ஜூன் மாதம் ரஷ்யாவுக்கு விஜயம் செய்வார் என்றும், அதன்பின் அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் செல்வார் என்றும் தெரிகிறது.

கிழக்கு ஜெர்மன் வெளிவிவகார இலாகா உதவிமந்திரியும் காமராஜைச் சந்தித்தார்.

## ஒருவர் கைது

லண்டன், மார்ச் 26

30,000 பவுன் பெறுமதியான சர்வதேச உதைபந்தாட்ட தங்கக் கிண்ணம் காணுமற்போனது குறித்து ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

## மேற்கு வங்கம்

கல்கத்தா, மார்ச் 26

தம்மைத் தலைவராகக் கொண்ட சர்வகட்சிகமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாக மேற்கு வங்க முதல் மந்திரி திரு. பி. ஸி. சென் அறிவித்தார். இதில் எதிர்க் கட்சித்தலைவர் ஜோதிபாசும் ஒரு உறுப்பினர்.

## சௌத்திரிக்கு தூதர் பதவி

புதுடில்லி, மார்ச் 26

பிரதம சேனுதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெறும் ஜெனரல் சௌத்ரி, கனடாவில் அடுத்த இந்தியத் தூதராக நியமிக்கப்படுவார் எனத் தெரிகிறது

அதற்கு முன் அவர் பிரிட்டனுக்குச் சென்று சிலவாரங்கள் ஓய்வெடுப்பார்.

## தாயகத்தில் இறக்க விரும்பிய ஜனுதிபதி

### துருக்கி பயணம்

வாஷிங்டன், மார்ச் 26

அமெரிக்காவில் சிகிச்சை பெற்ற துருக்கி ஜனுதிபதி ஜமால் டுர்ஸுல் அபாயகரமான நிலையில் விசேஷ விமானத்தில் வாஷிங்டனிலிருந்து தாயகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

76 வயதான ஜனுதிபதி தாம் தாயகத்தில் இறக்க விரும்பியதால் அங்கு அனுப்பப்பட்டார். திரு. டுர்ஸுலின் உடல்நிலை நம்பிக்கையளிப்பதாக இல்லை என துருக்கி பிரதமர் பார்லிமெண்டில் கூறினர்.

துருக்கி ஜனுதிபதியை அமெரிக்க ஜனுதிபதி ஜோன்ஸன் வழி அனுப்பிவைத்தார்.

# மீஸோக்களை விரட்டும் வேலை முடிவுற்றது

### தேசீய முன்னணி சட்ட விரோதம் என அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 26

மீஸோ மலை ஜில்லாவில் எல்லா முக்கிய நகரங்களிலும், எல்லா இடங்களிலுமிருந்து மீஸோக்கள் அகற்றப்பட்டு விட்டதாய் உள்நாட்டுமந்திரி திரு நந்தா பார்லிமெண்டில் அறிவித்தார்.

மீஸோ ஆயுத பாணிகள் காடுகளுக்கு ஓடிவிட்டார்கள் என்றும், பாகிஸ்தானுக்குள்ளும், பர்மாவுக்குள்ளும் ஓட முயற்சித்து வருகிறார்கள் என்றும், இவர்களை வளைத்துப் பிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாயும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் மீஸோ தேசிய முன்னணி சட்ட விரோத ஸ்தாபனம் என பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்விஷயத்தை மக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு 1 லட்சம் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

பாகிஸ்தானுக்குள் ஓடிய மிஸோக்கள் பற்றி, பாகிஸ்தான் அரசாங்கத்துடன் கடிதத் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாக உள்நாட்டு மந்திரி அறிவித்தார்.

# நெல்லியடியில் இளைஞன் படுகொலை

உடுப்பிட்டி, சனி

நெல்லியடிக்கண்மையில் முடக்காடு என்னுமிடத்தைச்சேர்ந்த இராமன் சின்னவன் என்பவரின் மகன் கோவிந்தசாமி என்னும் 16 வயது இளைஞன் நேற்று முன்தினம் இரவு சுமார் 7-30 மணியளவில் கழுத்திலிருந்து மார்புவரை ஒரே வெட்டாக வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உடனடியாக மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர் சில மணிநேரங்களில் காலமானுர்.

கொலைசெய்தவர் தலைமறைவாகி விட்டதாகத் தெரிகிறது. பருத்தித்துறை பொலிசார் இவரைத்தேடி வருகின்றனர். இக்கொலை சம்பந்தமான சகல விசாரணைகளையும் பருத்தித்துறைப் பொலிசார் நடத்தி வருகின்றனர். குடும்பச் சச்சரவு காரணமாக ஏற்பட்ட கொலை இது எனக் கூறப்பட்டது. கொலைசெய்யப்பட்ட இளைஞன் முன்பு நெல்லியடியிலுள்ள சப்பாத்துக்கடையொன்றில் வேலை செய்து வந்தார் எனத் தெரியவருகிறது.

## விவசாயப் பொருள் விற்பனை நிலயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரியாலை இளைஞர் விவசாயக் கழகத்தின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட விவசாயப் பொருள் விற்பனை நிலையம் ஒன்றைஅரியாலைகண்டி வீதியில் யாழ்ப்பாணக் காரியாதிகாரி திரு. சிவஞான சமீபத்தில் திறந்துவைத்தார். மேற்படி நிலையத்தை திறந்துவைத்துப்பேசிய திரு சிவஞானம் முன்னர் இருந்ததிலும் பார்க்க இன்று யாழ்ப்பாணம் விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிற தென்றும் அன்று அதிகவிலையுடன் தட்டுப்பாடாக இருந்தஉருளைக்கிழங்கு, வெங்காயம், கோவா போன்ற பயிர்வகைகள் போதியளவு யாழ்ப்பாணத்திலேயே பயிர் செய்கை பண்ணப்படுகின்றதென்றும் குறிப்பிட்டார். மேற்படி திறப்பு விழாவுக்கு அரியாலை கிராம சேவகர் திரு. க. சண்முகராசா தலைமைவகித்தார். திரு கா.ச.நடராசா ஜே. பி விவசாயப் பயிர்ச்செய்கை பற்றி சொற்பொழிவாற்றினுர். இவ்விழாமுடிவில்கழக காரியதரிசி திரு.பா. பத்மநாதன் நன்றி கூறினுர்.

## சிரமதான இயக்கம்

திருக்கேதீச்சரம். சனி

வவுனிக்குளம் 2-ம் யூனிற்றில் கைத்தறி நெசவு நிலையம் கட்டுவதற்குரிய இடத்தில்உள்ள கட்டைகளைவெட்டும் சிரமதான இயக்கத்தை மாந்தைப்பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. கே. சி பேக்மன்ஸ் சென்றபுதன்கிழமை ஆரம்பித்துவைத்தார்.

வவுனிக்குளம் கிராம முன்னேற்றச்சங்க அங்கத்தவர்களும் 2-ம் யூனிற் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் இயக்கத்தில் கலந்து கொண்டனர். கிராம முன்னேற்றச்சங்கத்தலைவர் திரு. வி. நடராசா, கிராமசேவகர் திரு. பீ. தாமோதரம்பிள்ளை, ஆசிரியர்கள் திருவாளர்கள் எஸ். சின்னத்தம்பி, எஸ். மரியநாயகம், கே. வேலுப்பிள்ளை ஆகியவர்கள் மேற்படி இயக்கத்தை வெற்றிகரமாக நடத்த முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்கள்,

## பல்கலைக்கழக இலக்கிய கலைவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

கொழும்பு, ஞாயிறு

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினர் இம்மாதம் 20-ந் திகதி முதல் நடத்திவரும் இலக்கிய கலைவிழாவில் இன்று நடைபெறும் கதம்ப நிகழ்ச்சிகளில் திரு. வீரமணி ஐயரின் இசைக்கச்சேரியும், செல்வி மிராண்டா ஹேமலதாவின் நடனமும், ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தினரின் 'மயில்கால் எண்ணெய்' 'வேலையில்லாத்திண்டாட்டம்' 'சக்கடத்தார்' ஆகிய நாடகங்களும் இடம் பெறும். இந்நிகழ்ச்சிகள் வைத்திய மண்டபத்தில் நடைபெறும்.

நாளை காலை மண்டபத்தில் இலக்கிய மகாநாடு நடைபெறும். இதைத்தொடர்ந்து பரிசளிப்பு நடைபெறும்.

## இந்தோ - பாக். ஹாக்கீ போட்டி

ஹாம்பர்க், மார்ச் 26

வருகிற மே மாதம் 19-ம் திகதி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சர்வதேச ஹாக்கி போட்டி இங்கு நடைபெறும்

## திரைப்படவிழா


புதுடில்லி, மார்ச் 26

7 நாள் ரஷ்ய திரைப்பட விழா இங்கு ஆரம்பமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்து ஓய்ந்த பாப்பாவுக்கு

# மாமைட்



பாப்பா பள்ளிக்குச் சென்று



பாடந்தனை ஊக்கமாகப் படித்து



சுறுசுறுப்பாக துள்ளி குதித்தாடி



களைத்து வீடு திரும்புகையில்
துரித வளர்ச்சிபெற பாப்பா அருந்துவது மாமைட்

சக்தி மிகுந்த சுகவாழ்வுக்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் கொண்ட ஒரு சிறந்த உணவு மாமைட். வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சப் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம்.






மாவுப் பொருள் சர்க்கரைப் பொருள் அற்ற, B விட்டமின் நிறைந்த, தூய்மையான, தாவர உணவுப் பொருள்.

627/66

# மூளைக்கு வேலை

கடந்த வாரம் இப்பகுதியில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பலர் விடையெழுதியிருந்தனர். ஆனால் அதிகமானவர்கள் ஒரு கேள்விக்கு மட்டுமே விடையெழுதியிருந்ததால் பலரது பெயர்கள் இங்கு வெளியிடப்படவில்லை. இரண்டு கேள்விகளுக்கும் சரியான விடையெழுதியவர்களின் பெயர்கள் மட்டுமே இங்குவெளியாகின்றது.

அதற்கு முதல் சரியான விடைகளைக் கவனிப்போம். முதலாவது கேள்வியின்விடை: 14-12-1955. இரண்டாவது கேள்வியின் விடை: 4-10-1957.

பின்வருபவர்கள் எல்லோரும் இரண்டு கேள்விகளுக்கும் சரியானவிடையெழுதியிருந்தனர். இவர்களுக்கு எமது விசேஷ பாராட்டுதல்கள்.

கே. இராசகோபால், நல்லூர்; எம். எல். எம். இக்பால், யாழ்ப்பாணம்; ஆ. கிருஷ்ணமூர்த்தி, ஏழாலை மேற்கு; இ. பூரணலிங்கம், பளை; தா. ரவீந்திரன், காரைநகர்; மா. கருணாகரன், தெல்லிப்பழை: சி. காசிப்பிள்ளை, எழுதுமட்டுவாள்; சௌந்தரராஜன் கணேசஐயர், அனலைதீவு; ஐ. முருகையா, சூராவத்தை; எம். புஷ்பா, கரவெட்டி வடக்கு; எம். ஜெயசிங்கம், கரவெட்டி; சி. ஜே. செபரத்தினம், அல்வாய்; அ. கனகசூரியர், ஊரெழுமேற்கு; செ. மாசிலாமணி பூநகரி; இ. பூபாலரத்தினம், காரைநகர் கிழக்கு; வி. பரமேஸ்வரிஅம்மா, காரைநகர்; க. சொர்ணாம்பிகை, காரைநகர்; தி. சரவணபவன், சுன்னாகம்; ஏ. பயஸ், பாஷையூர்; வே. தம்பிஐயா, அரியாலை; வி. ஈஸ்வரிஅம்மா, காரைநகர்; வி. வேலாயுதம் எழுதுமட்டுவாள் தெற்கு.

## கேள்விமண்டலம்

இதோ இவ்வாரக்கேள்விகள்:

முதலாவது கேள்வி: போர்த்துக்கேயர் முதன்முதலாக இலங்கையை அடைந்தது எப்பொழுது?

இரண்டாவது கேள்வி: விண்வெளிக்கப்பலில் ரஷ்யா அனுப்பிய இரண்டு நாய்களும் விண்வெளியில் எத்தனை நாட்கள் தங்கியிருந்தன?

மேற்கூறிய இரண்டுகேள்விகளுக்குமுரிய விடைகளைத் தபாலட்டையில் எழுதி எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய விலாசம்: மாணவர்மலர், ''ஈழநாடு'' த. பெ. 47, யாழ்ப்பாணம்.

— சாந்தா

# விவாத மேடை இல. 1

''மாணவர் மலரில் விவாதமேடை வெளியாவதில்லை. மாணவர்களுக்கு அவசியமான இப்பகுதியை விரைவில் ஆரம்பியுங்கள்'' என்று பலரும் எழுதியிருந்ததைத்தொடர்ந்து இவ்வாரம் முதல் இப்பகுதியை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளோம். இதல் பங்கு பற்றுபவர்களுக்கு ஒரு வேண்டுகோள்-:

உங்களின் கருத்துக்களை சுருக்கமாக எழுதுங்கள். கருத்துக்கள் உங்களின் சொந்த அபிப்பிராயமாக இருக்கவேண்டும். இவ்வளவு தான்.

''விவாதமேடை'' இலக்கம் ஒன்றுக்குரிய விஷயதானம் இது தான்

படித்த மாணவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கவேண்டும்? கல்லூரிப்படிப்பு முடிந்து வெளியேறும் மாணவர்கள் தங்களின் எதிர்காலத்தை எவ்விதமாகத் திட்டமிடவேண்டும்? அரசாங்க உத்தியோகம் பெறுவதா? சொந்தத்தில் முயற்சி ஆரம்பிப்பதா அல்லது வேறு திட்டங்களில் ஈடுபடுவதா?

சுருக்கமாகவரும் கருத்துக்கள் மட்டுமே விவாதமேடைக்கு எடுத்துக்கொள்ளப்படும் இதனை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருந்து உங்களின் சிறந்த கருத்தை சுருக்கமாக எழுதியனுப்புங்கள். இவ்விவாதமேடையில் மாணவர்கள், மாணவிகள் எல்லோரும் கலந்து கொள்ளலாம். வேறு நிபந்தனைகளல்ல விவாதமேடை தொடர்ச்சியாக வெளிவரும். நீங்கள் எழுதியனுப்பவேண்டிய விலாசம் ''விவாத மேடை'' மாணவர் மலர், 'ஈழநாடு', த. பெ. 49, யாழ்ப்பாணம்.

நமது வஞ்ஞனம

# பூமியின் வாயு மண்டலம்

— ஆனந்தன் —

பூமியைக் காற்றுலாகிய ஒரு 'போர்வை' சூழ்ந்துள்ளது. இதுவே வாயுமண்டலம் எனப்படும், வாயுமண்டலம் இல்லாவிட்டால் பூமியில் உயிரினங்கள் ஒன்றும் வாழமுடியாது. பூமியும் மற்றக்கிரகங்கள் போலாகிவிடும்.

இவ் வாயுமண்டலத்தின் உயரம் சுமார் 250 மைல். இவ்வுயரம் துருவப்பகுதியில் குறைவாகக்காணப்படும். இதனைமூன்று பிரிவாகப் பிரிக்கலாம். தரையிலிருந்து சுமார் பத்துமைல் உயரத்துக்கு உள்ளபகுதி அடிவாயுமண்டலம் அல்லது மாறன் மண்டலம் எனப்படும். சீதோஷ்ணம், புயல் மழை முதலான கால நிலை வேறுபாடுகள் இம்மண்டலத்திலேயே நடைபெறுகின்றன. ... அதிகம் சஞ்சரிக்கின்றன. இதற்கு மேல் 'ஓசோன்' என்றவாயுவினாலான படை ... வெளியிலிருந்து வரும் அண்டவெளிக் கதிர்களை இப்படை பெரும்பாலும் உறிஞ்சிவிடும். இது இல்லாவிட்டால் பூமியில் உள்ள உயிர்கள் அண்டக் கதிர்களின் தாக்குதலால் பொசுங்கிவிட நேரிடும்!

இதற்குமேலுள்ளது அடுக்கு வாயுமண்டலம் எனப்படும். இம்மண்டலம் தரையிலிருந்து சுமார் முப்பதுமைல் வரை பரந்துள்ளது. இப்பகுதியிற்றான் விண்கற்கள் எரியத் தொடங்குகின்றன. இம்மண்டலத்தில் அடியிலிருந்து மேலேசெல்லச்செல்ல வெப்பநிலை கூடுகிறது.

அடுத்துள்ள அயனிமண்டலம் தரையிலிருந்து சுமார் 250 மைல் உயரம்வரை பரந்துள்ளது. பூமியில் ஒலிபரப்பப்படும் வானொலி அலைகளை இது தெறிக்கச் செய்து மீண்டும் பூமிக்குத்

(5-ம் பக்கம் பார்க்க)

# மாணவர் மலர்

## உதிர்ந்த முத்துக்கள்

நம்பிக்கை மகத்தான சக்தியுடையது. நம்பிக்கை உள்ளவர்களைத் தவிர வேறு எவராலும் வாழ்க்கையில் முன்னேற முடியாது. முன்னேற்றத்துக்கு வேர்போல் இருப்பது நம்பிக்கை. மற்றவைகளை எல்லாம் நீங்கள் ஒதுக்கித் தள்ளிவிடலாம். நம்பிக்கை மட்டும் உங்களிடம் எப்போதும் இருக்க வேண்டும்.

— இராமகிருஷ்ணர்

○ மனிதனிடத்தில் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் எந்த ஓர் ஆசிரியனும் எந்த ஒரு நூலும் போதித்துவிட முடியாது. அவரவர் உள்ளத்திலிருந்தே அவை தோன்ற முடியும்.

— மகாத்மா காந்தி

○ கற்பனைதான் கவலைக்குவித்து. கற்பனையால் ஆசைகளே அதிகரிக்கின்றன. அவ் ஆசைகள் நிறைவேற வழிகிடைக்காவிடில் கவலைதான் உண்டாகிறது. கவலை உள்ளத்தைத் தாக்க ஆரம்பித்ததும் உடலும் பாதிக்கப்படுகிறது. உள்ளமும் நோவடைகிறது.

— மகாத்மாகாந்தி

தொகுத்தவர்: என். எம். கே. நடராசா, பெரியதம்பனை, மடுக்கோவில்.




லக்ஷபான
பாட்டரிகள்

இறக்குமதியாகும் எந்த பாட்டரியையும் விட குறைந்த செலவில் கூடிய சேவை தருகின்றன.

ஏனெனில்:

- அவை, பூரண சக்தியுடனை தொழிற்சாலையிலிருந்து புதுமை குலையாமல் உங்களை வந்தடைகின்றன. இறக்குமதிபாட்டரிகள் போல சேமிப்பில் இருப்பதால் அவை சக்தி இழப்பதில்லை
- லக்ஷபானபாட்டரிகள், சர்வதேச மின் நுணுக்க கமிஷன்விதிக்கும் தரங்களுக்கு நிகரான அதி உன்னத சிறப்பு வாய்ந்தவை என்று பரீட்சித்து நிரூபிக்கப் பட்டவை.
- லக்ஷபான பாட்டரிகள் இறக்குமதியாகும் எந்த ரகங்களையும் விட மிக மலிவானவை.

எவ்.:.பண்ட் லைட் கார்ப்பரேஷன் லிமிட்டெட்

## விளம்பரம்

### பகிர[illegible]க அறிவித்தல்
### கிராமசபை, சுழிபுரம்
### இறைமதிப்புவரி

இக்கிராமசபைக்கு இறைமதிப்புவரி வகையால் கட்ட வேண்டிய பணம் நிலுவையாக இருப்பின் பணத்தைக் கட்ட வேண்டியவர்கள் 30-4-66க்கு முன் கிராமசபையில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி திகதிக்குமுன் கட்டத்தவறியவர்கள் வீட்டிலோ அல்லது வளவிலோ உள்ள அசையுள்ள அல்லது அசைவற்ற பொருட்களைக் கைப்பற்றி கிராமசபை பகிரங்க ஏலத்தில் விற்றுப் பணத்தை எடுக்க நேரும் என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

சு. கந்தசுவாமி,
தலைவர்.
சுழிபுரம் கிராமசபை.
பங்குனி 25, 1966. 2075

---

மல்லாகம்

## இந்துக்கல்லூரிக்கு முதலிடம்

மல்லாகம், சனி

யாழ். முற்றவெளியில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட உடற் பயிற்சிப் போட்டியில் மல்லாகம் இந்துக்கல்லூரி மாணவர்கள் சிரேஷ்ட, கனிஷ்ட இரு பிரிவிலும் முதல் இடம் வகித்து வெள்ளிக்கிண்ணங்களைச் சுவீகரித்ததுமல்லாமல், மிகத் திறமை வாய்ந்த குழுவினருக்காகிய மூன்றும் வெற்றிக்கிண்ணத்தையும் சுவீகரித்தார்கள். மல்லாகம் இந்துக்கல்லூரி 1965-ம் ஆண்டு அகில இலங்கைப் போட்டியிலும் சாம்பியனாகத் தெரியப்பட்டு, அகில இலங்கைச் சாம்பியன் கிண்ணத்தையும் கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## பூமியின் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி

திரும்பிவிடுகிறது. இதனால் வானொலி அலைகள் வெளியே செல்லாது வளைந்து, வளைந்து பூமியின் பலபகுதிகளுக்கும் செல்லக்கூடியதாகிறது.

வாயுமண்டலத்தில் நைதரசன், ஒட்சிசன், காபனீரொட்சைட்டு போன்ற வாயுக்கள் காணப்படுகின்றன 'ஒட்சிசன்' உயிர்கள் சுவாசிப்பதற்கு இன்றியமையாதது.

---

## பாரதி சாடிய பழமை

(2-ம் பக்கத்தொடர்ச்சி;

என ஒரு நூலே பாடியிருக்கிறார். பராசக்தி அவருடைய உபாசனைத் தெய்வமாகத் தெரிகிறது. ஞானப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள் என்ற வரிசைகளில் அவர் பாடல்கள் பல காணப்படுகின்றன. ஆனால், பாரதி இத்துறைகளில் பாடிய பாடல்களை ஆழ்ந்து கவனித்தால், அவர் அங்கு பழமையில் புதுமையைப் புகுத்தியுள்ளமை புலப்படும். பாரதி சிவலோகம், வைகுந்தம் போக விரும்பிப் பாடவில்லை. இந்த உலகில் நல்லாக வாழவேண்டும் என்றே பாரதி வரம் கேட்கிறார். தானும் உலகமும் நன்கு வாழ வழி செய்யும்படியே, அவர் கடவுளரை வணங்குகிறார். தமிழிலக்கியத்தில், பாரதிக்கு முன்பு தோன்றிய பக்திப்பாடல்களில் இத்தகைய கருத்துக்கள் சில வெகு அருகியே காணப்படடன. பாரதி பாடல்களில் இந்தக் கருத்துக்களே செறிந்து முதன்மையாகக் காணப்படுகின்றன.

'நாட்டு மக்கள்
நலமுற்று வாழவும்
நானிலத்தவர் மேனிலை
எய்தவும்'

தான் பாட விரும்புவதாகப் பாரதியே கூறுகிறார்.

'தனமும் இன்பமும்
வேண்டும்
தரணியிலே பெருமை
வேண்டும்'

என்ற அடிகள் பாரதிக்கு உலக வாழ்விலிருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றன. பராசக்தியிடம் அவர் வேண்டி நிற்பது இவற்றைத் தான்.

'எண்ணிலாத பொருட்
குவை தானும்
ஏற்றமும் புவி
யாட்சியும்....
தருவள் இன்றென
தன்னை யென் காளி
மண்ணிலார்க்குந் துய
ரின்றிச் செய்வேன்,
வறுமையென்பதை
மண்மிசை மாய்ப்பேன்'

தான் உலகில் நன்றாக வாழ்ந்து மற்றவர்களை நல்லாக வாழச் செய்யவேண்டுமென்று தான், பாரதி இங்கே காளியைப் பாடி வேண்டுகிறார்.

---

## கிரிக்கெட் போட்டி

சங்கானை, ஞாயிறு

சங்கானை கிறிஸ்து வாலிபர் சங்கத்திற்கும் சங்கானை ஐக்கியவிளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெறும் வருடாந்தக் கிரிக்கெட் போட்டி இன்று பிற்பகல் 2மணியளவில் சங்கானை பாரதிமைதானத்தில் நடைபெறும்.

---

## ஐயாறன்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

உணவோ எதிர்பாராமல் நிஷ்காமியமாகத் தொண்டு செய்கிறார்.

சமீபத்திலே அவர் எழுதி வெளியிட்ட 'நாவலர் நாடகம்' பற்றிஇலங்கையில் சிலர் குறை சொல்வதைக்குறித்து சுவாமி சற்றே வேதனை அடைந்துள்ளார். தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு செய்வதைத்தவிர தமக்கு வேறு நோக்கம் எதுவுமில்லை என்றும் முழுமூச்சாகக் கண்டனம் செய்யாமல், ஆக்கமுறையில் யோசனை கூறினால் இரண்டாம் பதிப்பிலே திருத்தம் செய்து வெளியிடலாம் என்றும் தெரிவித்தார்கள்.

ஃ ஃ ஃ

அதிகாலை 5 மணிக்கு அங்குள்ள சில அன்பர்கள் சுவாமி முன் கூடுகின்றனர். பூபாளத்திலே ''எழுந்தருள் கல்யாணி'' என்ற சுத்த சத்தி எழுச்சியைப்பற்றி சுவாமி பாட, மற்றவர்கள் பாடுகின்றனர். வேறு பல பாடல்களையும் பாடி, சிற்சில இடங்களில் விளக்கம் தருகிறார். தமது விரிந்த அனுபவத்திலிருந்தும், பிறமொழி இலக்கியத்திலிருந்தும் அவர் சொல்வதைக் கேட்பதே பெரிய படிப்பு. இந்த வாய்ப்புக் கிடைத்தவர்கள் பாக்கியசாலிகள்.

ஃ ஃ ஃ

தேனினும் இனியர்பாலன நீற்றர் தீங்கரும்பனையர் தந் திருவடிதொழுவார், ஊன் நயந்துருக உவகைகள் தருவார் உச்சிமேலுறைபவர் ஒன்றலாதூரார், வானகமிறந்து வையகம் வணங்க வயங்கொள நிற்பதோர் வடிவினையுடையார், ஆனையின் உரிவை போர்த்த எம் அடிகள் அச்சிறுபாக்கமதாட்சி கொண்டாரே.

— திருஞானசம்பந்தர்

---

## சமாச
## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், சனி

வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசக் கட்டிடத் திறப்பு விழா 30-ந் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு சுன்னாகத்தில் நடைபெறவிருக்கிறது.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. பி. இ வீரமன் கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சிறந்த முறையில் கட்டப்பெற்ற மாடி வீடு (பத்திராஸ்) சகல வசதிகளுடன் உள்ளது. 93,95, மெயின் வீதி, யாழ்ப்பாணம். விபரங்கட்கு: சாளி எவாட்ஸ், 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 2218

---

கீழ்க்காணும் புடவைக் கடைத் தளபாடங்கள்: 6 கண்ணாடி அலுமாரிகள், 3 ஷோகேஸ்கள். உரிமையாளர்: பி. பிரான்சிஸ்பிள்ளை, ஊர்காவற்றுறை 2214

---

### வாடகைக்கு

சுன்னாகம் சந்தையின் தென்மேற்கு மூலையில் மூன்று விசாலமான கடைகள் வாடகைக்குண்டு. எவ்வித வியாபாரத்துக்கும் பொருத்தமானவை. ஒன்று உடனடியாகவும், மற்றவை அடுத்தமாத முடிவிலும் கிடைக்கும். விபரங்கட்கு: பத்மநாதன், ஆஸ்பத்திரி, அச்சுவேலி. 2217

---




### கொழும்பு
### ஞாயிறு 27 - 3 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திவிருந்து.

இரவு 6-15 பஜனை, 6-45 பாட்டு, 7-15 மன்ற நாடக விழா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாட்டு, 10-00 மாதர் கேட்டவை.

---

### கல்வி

ஆரம்ப சிங்கள வகுப்பொன்று அண்மையில் ஆரம்பிக்கவிருக்கின்றது. சேர்ந்து கல்விபயில விரும்புவோர் ஆசிரியரோடு கலந்தாலோசிக்கவும். A. P. டானியல், தபாற் கந்தோரடி, கரவெட்டி. 2172

---

### வைத்தியம்

விசர் நாய்க்கடி, தாய்க்கடி மற்றும் சகல இரணத்திற்கும் வைத்தியம் செய்யப்படும். ஆங்கில வைத்தியத்தாலும் வெறெந்த முறையாலும் மாற்ற முடியாத விசர் நாய்க்கடியை முன்னோர்களின் முறையும், தனது அனுபவ முறையுடனும் ஆயிரக்கணக்கானோருக்கு மாற்றி சுகமடையச் செய்பவர். நற்சாட்சிப்பத்திரம் பெற்றவரான வைத்தியர். நா. தம்பு. தாவடி வடக்கு, கொக்குவில். 2222

---

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

### காணவில்லை

புங்குடுதீவு நடேசு, ஜெயகுமார் ஆகிய இருவருடைய கூப்பன் அடிக்கட்டைகள் இரண்டும் அதற்குரிய அத்தாட்சிப்பத்திரங்களும் கணபதிப்பிள்ளை விசுவலிங்கம் கையெழுத்துடன் ஊர்காவற்றுறை யூனியன் சந்தியில் 26-3-66 காலை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2228

---

## ஆர்ச்.பிஷப்

சென்னை, மார்ச் 26

அதிவண. அருளப்பா மைலாப்பூர் ஆர்ச்பிஷப்பாக நேற்று பதவி ஏற்றார்.

---



“ லேடன் ” LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ ரி சேட்
● ரெறி சேட்
● ரெறி பிளவுஸ்
● பேபி வெஷ்ட்
● கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
32A, கே. கே. எஸ. ரோட், யாழ்ப்பாணம்



தரமான மொறட்டுவை வீட்டுத் தளவாடங்கள்

தரமான தளவாடங்களுக்கும், நியாயமான விலைக்கும்
எம். எஸ். பெர்னாண்டோ அன் கொம்பனி
பிரசித்திபெற்றது.
இந்தப்பருவத்தில் விற்பனையாகும் பொருட்களில் ஒன்றுதான் கீழே காட்டப்பட்டுள்ளது.

முதல்தர பர்மா தேக்கினாலான ஸ்பிரிங் கட்டில் ரூபா 245-00.
இரண்டாந்தர பர்மா தேக்கினாலான ஸெட்டின்ஸ்பிரிங்கட்டில் ரூபா 175-00.
(முதல்தர ஸ்பிரிங் இணைக்கப்பட்டது)



விருந்தை முதல் சமையலறை வரைக்கும் உங்கள் சகல வீட்டுத் தேவைக்குமான தளவாடங்களும் எங்களிடம் உண்டு. தரம், வேலைப்பாடு, விலை ஆகியவற்றில் உத்தரவாதம்.

எம். எஸ். பெர்னாண்டோ அன் கம்பெனி
110, காலி வீதி மொறட்டுவை
கிளைகள் - இல. 4, இண்டிபெத்த, மொறட்டுவை.
இல. 32, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் சீனதலைவர்களுக்கு அமோக வரவேற்பு

## 21 பீரங்கிகள் முழக்கம்

ராவல்பிண்டி, மார்ச் 26

இன்று பாகிஸ்தான் வந்து சேர்ந்த சீன ஜனாதிபதி லியூஷா சிக்கும், வெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென்யீக்கும் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

சீனாவின் உதவியும், சீனத் தலைவர்களின் பாகிஸ்தான் விஜயமும், அமெரிக்க உதவி நிறுத்தப்பட்டதால் எந்த இடத்திலிருந்தும் உதவியை எதிர்பார்க்கலாம் என்பதை உணர்ந்த பாகிஸ்தான் விரும்புவதை எடுத்துக் காட்டுவதாய் இருக்கிறது என இங்கு கருதப்பட்டது.

சீனாவின் ஜனாதிபதி ஒருவர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

திரு. சியுடன், உயர்தர சீன அதிகாரிகளும் வந்திருக்கின்றனர்.

சீன ஜனாதிபதியை அதிபர் அயூப்கான் வரவேற்றபோது 21 பீரங்கிக் குண்டுகள் முழங்கின.

விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். சீனத் தலைவர்கள் சென்ற வீதிகள் வழியாவும் பெருந்தொகையான மக்கள் கூடிநின்று வரவேற்பு அளித்தனர்.

அதிகாலையிலிருந்தே சீனத் தலைவர்களைக் காணும் பொருட்டு விசேஷ ரயில்களும், விசேஷ பஸ்களும் ராவல் பிண்டிக்கு விடப் பட்டன.

இன்று சீன ஜனாதிபதி திரு. அயூபுடன் பகல் போஜனம் அருந்தினார். இஸ்லாமாபாத், கராச்சி ஆகிய நகரங்களுக்கும் அவர்கள் விஜயம் செய்ய விருக்கிறார்கள்.

அடுத்த மாதம் சீனத் தலைவர்கள் கிழக்கு பாகிஸ்தானுக்கு விஜயம் செய்கிறார்கள்

பாகிஸ்தானுக்கும் சீனாவுக்குமிடையே ஏற்பட்டுள்ள எல்லை ஒப்பந்தம் இரு அண்டை நாடுகளுக்கிடையேயான நல்லுறவை நிரூபிப்பதாய் இருக்கிறது என பாகிஸ்தான் வட்டாரங்கள் கூறின.

REGAL—JAFFNA
NOW SHOWING!
JAMES GARNER
DORIS DAY
IN
MOVE OVER
DARLING
[PANAVISION--COLOR]

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
நடித்த
பூம்புகார்

ராஜா
(யாழ்ப்பாணம்)
3-00, 6-30, 9-45க்கு மட்டும்
கங்கா ஜம்னா
(ஹிந்தி)
4-45க்கு மட்டும்
இட்ஸ் ஏ உமன் வேள்ட்

## உரியவர் யார்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அண்மையில் உள்ள வீதியொன்றில் பெரிய திறப்பு ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 2 மீனவரைக் காணவில்லை

நல்லூர், சனி

மயிலிட்டியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்களை இரண்டு நாட்களாகக் காணவில்லை என்று நேற்றுக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அவர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபடும்படி கடற்படையினரிடம் கோரப்பட்டுள்ளது.

மயிலிட்டியில் இருமீனவர்களை வள்ளத்துடன் காணவில்லையென்று காரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை மூலம் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக கடற்படையினருக்கு தேடுதல் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்பொழுது நடைபெறுகிறது
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
சபையர் (வெள்ளவத்தை) விஜிதா (அட்டன்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
முத்துராமன், மனோகர்,
சந்திரகாந்தா, ராஜஸ்ரீ,
பேபி ஷகிலா
நடிக்கும்
மொடேர்ன் தியேட்டர்ஸின்
அம்மா எங்கே?
விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு)
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
கடைசி வாரம்
சர்வர் சுந்தரம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நள்ளிரவில் துணிகரத் திருட்டு

உடுப்பிட்டி, சனி

நெல்லியடிச்சந்தியிலுள்ள புருஷோத்தமன் என்னும் தையற்காரருடைய ஜவுளிக் கடையில் நள்ளிரவில் ஓடு கழற்றித் துணிகரத்திருட்டு நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடையினுள்ளே புதிதாக வாங்கி வைக்கப்பட்ட விலையுயர்ந்த சேட் வகைளும், துணிவகைகள் சிலவும் திருடப்பட்டுள்ளதாகஅறியப்படுகிறது.

பருத்தித்துறைப் பொலிசார் மேற்படி கடைக்கு வந்து பார்வையிட்டதுடன் திருட்டைச் செய்ததாகக் கருதப்படுபவர்களின் விரல் அடையாளங்களையும் எடுத்துச்சென்றுள்ளனர்.

## ஈழகேசரி பொன்னையா நினைவுவிழா

சுன்னாகம், வெள்ளி

இம்மாதம் 27-28ந் தேதிகளில் 'ஈழகேசரி'ப் பொன்னையா நினைவுவிழா குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் நிகழும்.

### கலைநிகழ்ச்சி

வழமைபோல இத்தினத்தையொட்டிய பேச்சுப் போட்டி இரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் 27ந் தேதி சனிக்கிழமை காலை ஆரம்பமாகும். நண்பகல் 1-30 மணியளவில் மகேஸ்வரபூஜை நிறைவுற்றபின் பேச்சுப்போட்டியில் முதல் மூன்றிடம் பெற்றவர்களுக்கும் பரிசுவழங்கப்படும். பேச்சுப்போட்டி பரிசளிப்பு நிகழ்ச்சிகளுக்கு வைத்திய கலாநிதி வ. த. பசுபதி தலைமைவகிப்பார். முதலியார் குல. சபாநாதன் சிறப்புரை வழங்குவார்.

### பிற்பகல் நிகழ்ச்சி

பிற்பகல் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா தலைமையில் நாடகப்போட்டி ஆரம்பமாகும். வலி. வடக்குப் பெரும் பகுதி இறையதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை விசேஷ உரை வழங்குவார். முன்னுள் நாடகப்போட்டியில் 'தீந்தமிழ் தீ', 'சீ ஐ. டி. மாலா', 'இளங்கோ', 'சுமங்கலி', 'உச்சித்தானே போட்டான்', 'இதயச் சாந்தியின் பரிசு', 'பல்லி சொல்லுகுது', 'நெஞ்சே நீ சொல்' எனும் எட்டுநாடகங்கள் பங்கு பற்றவுள்ளன.

### இரண்டாம் நாள் நிகழ்ச்சி

இரண்டாம் நாள் நாடகப் போட்டி கலையரசு க. சொர்ணலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும். 'மண்ணாசை', 'சந்தேகத்தின் விளைவு', 'மறக்குடிமாண்பு', 'சுயநலம்', 'சங்கரர்', 'நண்பனின் நயவஞ்சகம்', 'சாக்கிறட்டீஸ்', 'தியாகச் சுடர்' ஆகிய நாடகங்கள் இடம் பெறுகின்றன. போட்டியில் முன் மூன்றிடம் பெற்ற நாடகங்களுக்குரிய பரிசுகளை காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பிரதம அதிகாரி திரு. எஸ். வி. மூர்த்தி வழங்குவார். நாடகப்போட்டியின் மத்தியஸ்தர் குழுவுக்கு திரு. சி. சுப்பிரமணிய ஐயர் தலைமைதாங்குவார். நாடகப் போட்டியின் தீர்ப்பை மத்தியஸ்தர்கள் ஆலோசிக்கும் இடைவேளையில் யாழ் கவின்கலை மன்றத்தினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

## மகோற்சவம்

மாவிட்டபுரம், சனி

தெல்லிப்பழை ஸ்ரீ மகாமாரியம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் சனிக்கிழமை ஆரம்பமாகியது. அடுத்த மாதம் [illegible] மறுநாள் தீர்த்தமும் நடைபெறும்.



# சிறுபோக வேளாண்மை கால ஆலோசனைக் கூட்டம்

## நிறைவேறிய தீர்மானங்கள்

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சி, இரணைமடுக்குள நீர்ப்பாய்ச்சல்திட்டத்தின் கீழ் உள்ள 1966-ம் ஆண்டுக்கான சிறுபோக வேளாண்மைக்கால ஆரம்ப ஆலோசனைக்கூட்டம் இன்று காலை யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் திரு வேணன் அபயசேகராவின் தலைமையில் கிளிநொச்சி தமிழ்மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சொந்தக் கமக்காரர் குத்தகைக்காரர், செய்கைக்காரர் ஆகியவர்கள் உட்பட 300க்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர்.

உதவி மாவட்ட அதிபர் ஜே. எம். சபாரத்தினம், கமத்தொழில் உதவி ஆணையாளர் கே. சபாரத்தினம், நீர்ப்பாசன என்ஜினியர் கே. ஜயசிங்கா, கரைச்சிப் பகுதி காரியாதிகாரி எச். ஈ. புள்ளநாயகம், விவசாய சுப்பிறின்டன் வி. தங்கராசா மற்றும் விவசாய நீர்ப்பாசன, கமத்தொழில் இலாகா உத்தியோகத்தர்களும் இக் கூட்டத்துக்கு சமுகமளித்திருந்தனர்.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

(1) விதைக்கவேண்டிய ஏக்கர் தொகை: கமக்காரர் எல்லோரும் தங்களுக்குள்ள காணிகளில் நாலில் ஒன்று, அதாவது 25 வீதம்விதைக்கலாம். ஆகக் குறைந்தது (1 1/2) ஏக்கர் வரையும் எவரும் விதைக்கலாம். (2) விதைக்கவேண்டியநெல்லினம்: மூன்று மாதம்—நாலு மாத நெற்கள். (3) முதற் தண்ணீர் கொடுக்கும் திகதி: வலது கரைக்கு 10-4-66. இடதுகரைக்கு 16-4-66. (4) தண்ணீர்ப் பங்குகள் மாற்றுவதற்குக் கடைசித் திகதி 10-4-66. (5) விதைப்புக் கடைசித் திகதி: நாலு மாத நெல்லுக்கு 31-4-66, மூன்று மாத நெல்லுக்கு 31-5-66 (6) கடைசியாகத் தண்ணீர் கொடுக்கும் திகதி 31-8-66 (7) வேலிகாவல், வாய்க்கால் துப்பரவு, செய்வதற்குக் கடைசித் திகதி10-4-66 (8) கால்நடைகள் யாவும் வேளான்மைசெய்யுமிடங்களிலிருந்து இரண்டு மைல்களுக்கப்பால் கொண்டு போய் இரவில் கட்டி பகலில் மேய்க்கவேண்டும்.

கிளிநொச்சிப் பகுதி கரைச்சி — இரணைமடுக்குளக் குடியேற்றத்திட்டங்களுக்கான 1966-ம் ஆண்டு சிறுபோக நீர்ப்பாசன ஆலோசனைக்கமிட்டி இணைப்புக் கூட்டம் கடந்த 12-ம் திகதி நடைபெற்றது. அதன் பிரகாரம் பொதுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

## சிங்கள தந்திகள்

கொழும்பு சனி.

நாடு முழுவதிலுமுள்ள தபால் கந்தோர்களில் சிங்களத்தில் தந்திகள் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற மாத்தறை எம். பி. யின் யோசனைக்கு பதில் தபால் தகவல் மந்திரி விஜயபாலா மென்டிஸ் பதிலளிக்கையில் நாடுமுழுவதிலும் சிங்களத்தை அமுல் நடத்துவதுதான் அரசாங்கத்தின் கொள்கையென்றும் இதில் சில கஷ்டங்கள் ஏற்படக்கூடுமென்றும் சில இடங்களில் 'சதி' செய்பவர்களும் இருக்கக் கூடும் என்றும் கூறினார்.

## கோப்பாய்க்கு .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரைக் கேட்டுக் கொள்கின்றோம்.'

கோப்பாயிலுள்ள விவசாயிகளும் பாவனையாளர்களும் பயனடையும் வகையில் நவீன சந்தையொன்று அமைப்பதற்கும் மந்திரி உதவவேண்டுமெனவும்நாம் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கோப்பாய் கிராமசபை அலுவலகம் மிகச் சிறிய தொரு கட்டிடத்தில் இயங்கிவருவதாகவும் இதனால் சபை அலுவல்கள் சீராக நடைபெற முடியாதவாறு தடைகள் இருப்பதாகவும் இந்தநிலையை நீக்குமுகமாக நவீனமுறையிலமைந்தபுதிய கட்டடம் அமைத்துந் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திரு. சண்முகநாதன் அமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

ந. நி,

## நாட்டின் பொருள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அவர்குறிப்பிட்டார்.

திரு. சோமசுந்தரம் தொடர்ந்து பேசுகையில், உற்பத்தித்துறையின் எல்லா முனைகளிலும் தனிப்பட்ட தொழில் அதிபர்கள் தம்மால் இயன்ற எல்லாவிதத்திலும் கடினமாக உழைத்து நாட்டின் வளத்தைப்பெருக்கவேண்டும் என்றார்.

## ஜி. ஜி. க்கு வேலணையில் வரவேற்பு

வேலணை, ஞாயிறு

தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணம் எம். பியுமான திரு' ஜி. ஜி. பொன்னம்பலத்தை கௌரவிக்கு முகமாக வேலணை மகா மத்திய வித்தியாலய மைதானத்தில் பொது வரவேற்பொன்று நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது.

## உலக நாடகதினம்

கொழும்பு, சனி

உலக நாடகதினம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) இலங்கையில் ஆரம்பமாகவிருக்கின்றது. கலாசார இலாகாவால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த நாடக விழாவை கல்வி கலாசார மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

இந்த விழாவையொட்டி நாட்டின் பலவிடங்களிலும் நாடக நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றது. கொழும்பு, கண்டி, குருநாகலை, பதுளை, காலி, இரத்தினபுரி, அனுராதபுரம் ஆகிய முக்கிய இடங்களில் இந்நாடகம் நடைபெறும்.

நாடகம் சம்பந்தமான சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட நூல்களும் காட்சிக்கு வைக்கப்படவிருக்கின்றன.

## பட்டின சபையின் முன்மாதிரி

சுழிபுரம், சனி

சங்கானை பட்டின சபையினர் மில் ஒழுங்கையில் கட்டிய ஆறு வீடுகளை அவ்விடத்தைச்சேர்ந்த வீடு இல்லாதவர்கள் ஆறு பேருக்கு கொடுத்துள்ளார்கள். சங்கானை பட்டின சபையின் முன்மாதிரியான இக்காரியத்தை பலர் பாராட்டியுள்ளனர், இம்மாதத்திற்குள் வீடுபெற்றவர்கள் புதியவீட்டிற்கு செல்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org